கும்பகோணம் மாநகராட்சி

சாதாரணக்கூட்ட அழைப்பிதழ்

கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக்கூட்டம் வருகின்ற **29.07.2026 புதன்கிழமை காலை** 11.00 மணியளவில் கும்பகோணம் மாநகராட்சி புதிய அலுவலகத்தில் உள்ள **திரு.கோசி.மணி மாமன்ற வளாகத்தில்** உள்ள **திரு.இரா.துரை மாமன்ற** கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடம் : கும்பகோணம்
நாள் : 23.07.2026

மேயர்
கும்பகோணம் மாநகராட்சி

இணைப்பு : பொருள்களில் நிரல்
பெறுநர் : **அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்**
நகல் :

1. **பாராளுமன்ற உறுப்பினர்**, மயிலாடுதுறை
2. **மாநிலங்களவை உறுப்பினர்**
3. **சட்டமன்ற உறுப்பினர்**, கும்பகோணம்
4. **அனைத்து நாளிதழ்கள்**

மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 29.07.2026ம்	ஜூலை மாதம் சாதாரணக்கூட்ட தீர்மானம் வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்	மாமன்ற தீர்மான எண்
	பொருள் எண்.1 இம்மாநகராட்சிக்கு சொந்தமான பல்வகைப்பட்ட இனங்களில் குத்தகை இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் தொடர்பாக தஞ்சாவூர் செய்தி மக்கள் தொடர்பு மூலமாக கடந்த 19.06.2026 விளம்பரம் செய்யப்பட்டதற்கு விளம்பரக் கட்டணம் ரூ.33,180/–ஐ தினத்தந்தி நாளிதழுக்க வழங்குவதற்காக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** அ. தினத்தந்தி நாளிதழுக்கு தொகை ரூ.33,180/–ஐ வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம். ஆ. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். **ந.க.எண்.9172/2023/**அ7/	569 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.
	பொருள் எண்.2 தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தாலுக்கா தாராசுரத்தில் தஞ்சாவூர் ராஜா சத்திரத்திற்கு சொந்தமானதும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தில் உள்ளதுமான புஞ்சை நில புல எண்.2/4,ல் 3.59 ஏக்கர் அல்லது 1,56,390.40 சதுர அடி நிலத்தை வருடம் ஒன்றுக்கு ரூ.10,07,090/– குத்தகையாக நிர்ணயம் செய்து 30 வருட கால குத்தகைக்கு கும்பகோணம் நகராட்சிக்கு குத்தகைக்கு விடவும் மூன்று வருடத்திற்கு ஒருமுறை அப்பொழுது உள்ள சந்தை மதிப்பின்படி குத்தகையை உயர்த்துவதற்கும், கும்பகோணம் நகராட்சிக்கு சந்தை அமைக்க முன் நுழைவு அனுமதி வழங்கவும் ஆணை வழங்கும்படி தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சத்திர நிர்வாகம் செயற்குறிப்பு அனுப்பியிருந்தார். சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் தகுந்த ஆணை பிறப்பிப்பதற்காக அச்செயல் குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதன் அடிப்படையில், அரசு கவனமுடன் பரிசீலித்து அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உள்ளாட்சி அமைப்பான கும்பகோணம் நகராட்சிக்கு சந்தை அமைப்பதற்கான நிலம் கோரப்படுவதால் இதனை சிறப்பு நேர்வாகக்கருதி அந்நிலத்தினை கும்பகோணம் நகராட்சிக்குசந்தை அமைப்பதற்கு குத்தகை விடவும் சந்தை மூலமாக ஆண்டொன்றுக்கு நகராட்சி பெறும் மொத்த வருமானத்தில் மூன்றின் ஒரு பங்கை குத்தகைத் தொகையாக மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு கும்பகோணம் நகராட்சி செலுத்த வேண்டும். என்று நிர்ணயம் செய்து அரசாணை நிலை எண்.384 நாள்.25.08.1998, தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலைத்துறை மூலம் ஆணையிட்டுள்ளது. மேற்கண்டவாறு, அரசாணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து 30 வருடம் காலமானது 24.8.2028 உடன் முடிவடைவதால் குத்தகையினை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டித்தும் கும்பகோணம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதாலும் பொதுமக்களுக்கு அத்தியாவசிய தேவையான காய்கறிகள் விற்கப்படுவதாலும், மாநகராட்சிக்கு மையப்பகுதியாக உள்ளதாலும், ஏற்கனவே, பொதுமக்களுக்கும் மொத்தம் மற்றும் சில்லறை வியாபாரத்திற்கும் பெரும் உதவியாக உள்ளதாலும், தொடர்ந்து சந்தையினை மாநகராட்சிக்கு குத்தகைக்கு தொடர வேண்டிய சூழ்நிலை உள்ளது.மேலும், கும்பகோணம் மாநகரம் அதனை சுற்றியுள்ள சிற்றூர்களிலிருந்து சுமார் 750–க்கும் மேற்பட்ட வியாபாரிகள் தினமும் சந்தைக்கு வந்து காய்கறிகள் வாங்கி அதனை விற்பனை செய்கின்றனர். கும்பகோணம் மாநகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து சுமார் 300–க்கும் மேற்பட்ட நான்கு சக்கர வாகனங்களிலிருந்து வியாபாரிகள் சந்தையில் தினம்தோரும் காய்கறிகளை கொள்முதல் செய்கின்றனர். சுமார் 1300–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தினமும் இச்சந்தையில் பணிபுரிந்து பயனடைந்து வருகின்றனர். மேலும், சந்தை மூலமாக ஆண்டொன்றுக்கு மாநகராட்சி பெறும் மொத்த வருமானத்தில் மூன்றில் ஒரு பங்கை குத்தகை தொகையாக ஏற்கனவே வழங்கப்பட்டு வந்த நிலையில் சந்தையினை பராமரிக்கும் செலவு, மின் கட்டணம், சந்தை வளாகத்தில் தூய்மைப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஒரு ஆண்டிற்கான உத்தேச செலவினம் ரு. 1,26,47,250/–ஆகும். மற்றும் அடிப்படைவசதிகள் ஆகியவற்றிற்கான செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதாலும், கும்பகோணம் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதாலும் பொதுமக்களின் நலன் கருதியும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டும் ஒரு சிறப்பு நேர்வாக கருதி மேற்கண்ட தஞ்சாவூர் ராஜா சத்திரத்திற்கு மாநகராட்சிக்கு வரும் வருமானத்திலிருந்து 20% தொகையினை செலுத்துவதற்கு சம்மதம் தெரிவித்தும் 30 ஆண்டுகளுக்கு குத்தகைகளை நீட்டித்து தருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தஞ்சாவூர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசுக்கு பரிந்துரை செய்து அரசாணை அனுமதி பெற்றுத் தர மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** பொதுமக்களுக்கு நியாயமான விலையில் காய்கறிகள் கிடைப்பதற்கும் அருகில்உள்ள கிராமங்களில் பயிரிடும் காய்கறிகளைச் சந்தைப்படுத்துவதற்கும் மையப் பகுதியாக உள்ள தாராசுரம் சந்தையினை தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக சிறப்பு நேர்வாக கருதி குத்தகையினை நீட்டித்துக் கொள்ள அரசின் அனுமதி பெறலாம். **ந.க.எண்.18395/2000/அ7 /அ7**	570 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

பொருள் எண்.3

கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை மையத்தில் கும்பகோணம் வட்டாரத்தை சுற்றி அமைந்துள்ள திருவிடைமருதூர், திருபுவனம், திருநாகேஸ்வரம், வலங்கைமான் ஆகிய பேரூராட்சிகளின் தெருநாய்களுக்கு அறுவை சிசிச்சை செய்ய கும்பகோணம் மாநகராட்சியில் உள்ள மையத்தை பயன்படுத்த வேண்டி கடிதம் மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர். அதன் அடிப்படையில் நமது வாகனம், அறுவை சிகிச்சை மைய மற்றும் நீர், மின்சாரம் செலவீனங்களை கணக்கில் கொண்டு ஒரு நாய்க்கு தலா ரூ.200 வீதம் கட்டணம் நிர்ணயம் செய்து மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண். 5324/2026 / எச்.1

571 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது..

பொருள் எண்.4

கும்பகோணம் மாநகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மாநகராட்சி உரக்கிடங்கில் சேகரம் செய்யப்பட்டுள்ள NON-SALABLE பிளாஸ்டிக் மற்றும் இதர மக்காத குப்பைகளை சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகிறது. மாதந்தோறும் சுமார் 60 நடைகள் லாரி மூலம் தினசரி சேகரம் செய்யப்பட்டு வரும் NON-SALABLE கழிவுகளை சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்ப வேண்டியது அவசர அவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியினை தொடர்ச்சியாக மேற்கொண்டால் மட்டுமே மக்காத குப்பைகளை சேகரம் செய்ய இடம் இருக்கும் என்பதால் மறு சுழற்சி செய்ய இயலாத குப்பைகளை அப்புறப்படுத்த லாரி மூலம் இயக்குவதற்கும் அதற்குண்டான உத்தேச செலவீனம் ரூ.09.50/- இலட்சத்திற்கும் (ரூபாய் ஒன்பது இலட்சம் ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

(அ) அனுமதி அளிக்கலாம்.

(ஆ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

ந.க.எண். 12734/ 2025 / எச்.1

572 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது..

பொருள் எண்.5

தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களுக்கு, 2021-2022 ஆம் ஆண்டில் இம்மாநகராட்சியில் தாராசுரம் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பொழுது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை 1,15,000/- மற்றும் 2026-2027-ம் ஆண்டிற்கு இம்மாநகராட்சி செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.3,00,000/- ஆக கூடுதல் ரூ.4,15,000/- நகரியியல் நிறுவனத்திற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: **மாமன்றம் அனுமதிக்கலாம்.**

ந.க.எண்.500/2017/சி1

573 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது

பொருள் எண்.6

கும்பகோணம் மாநகராட்சி மாமன்றத் தீர்மான எண்.67 நாள்.27.08.2024 -ல் 01.10.2024 முதல் பெயர் மாற்றக் கட்டணம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டது.

பெயர் மாற்றக் கட்டணம்

விபரம்	ஏற்கனவே நடைமுறையில் உள்ளது	மறுநிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் ரூ.10.00 இலட்சத்திற்கு உட்பட்ட சொத்து மதிப்பு (பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பு)
சொத்துவரி	ரூ.200/-	ரூ.1000/-
குடிநீர் கட்டணம்	-	ரூ.500/-
புதைவடிகால் இணைப்பு	-	ரூ.1000/-
ரூ.10.01 இலட்சத்திற்கும் மேல் ரூ.30.00 இலட்சம் வரை (பத்திரம் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பு)	-	ரூ.2000/-
ரூ.30.01 இலட்சத்திற்கும் மேல் ரூ.50.00 இலட்சம் வரை (பத்திரம் குறிப்பிட்ப்பட்டுள்ள மதிப்பு)	-	ரூ.3000/-
ரூ.50.01 இலட்சத்திற்கும் மேல் ரூ.80.00 இலட்சம் வரை	-	ரூ.4000/-
ரூ.80.01 இலட்சத்திற்கும் மேல் ரூ.1.00 கோடி வரை	-	ரூ.5000/-
ரூ.1.01 கோடிக்கு மேல் ரூ.2.00 கோடி வரை	-	ரூ.10000/-
ரூ.2.01 கோடிக்கு முதல் மேற்கண்ட விகிதாச்சாரப்படி கணக்கிடப்பட்டு வசூல் செய்யப்பட வேண்டும்	-	ரூ.20000/-
குறிப்பு: ஒவ்வொரு கூடுதல் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில்		

574 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12199/ஆர்1/2025 நாள். 24.12.2025 –ல் தமிழ்நாடு அரசு சிறப்பு அரசிதழ் எண்.836 நாள்.16.12.2025 இன்படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023–இல் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் சொத்துவரி பெயர் மாற்றக் கட்டணத்தினை கீழ்கண்டடுள்ளவாறு நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தற்போது மறுநிர்ணயம் செய்யப்ட உள்ள சொத்துவரி பெயர் மாற்றக்கட்டணம்

வ. எண்	குடியிருப்பு பயன்பாடு(ரூபாயில்)	பிறப்பயன்பாடு (ரூபாயில்)
1	ரூ.500	ரூ.1000

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 –விதி எண்256(3) (4) உட்பிரிவுகளில் சொத்துவரி பெயர்மாற்றம் மற்றும் கால வரையறை குறித்து விவரிக்கப்பட்டுளதன் படி மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், குடிநீர் கட்டணம் விதிப்பு எண்களுக்கு பெயர் மாற்றக்கட்டணம் எக்காரணம் கொண்டும் வசூலித்தல் கூடாது. சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்படும் பொழுது சம்மந்தப்பட்ட சொத்துவரிவிதிப்பு எண்களுக்குரிய குடிநீர் கட்டணம் மற்றும் பாதாளச்சாக்கடை இணைப்பு எண்களையும் உரிய உரிமையாளரின் பெயருக்கு அதே விண்ணப்பத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது, மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.சி1/7491/2024.

பொருள் எண்.7

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான உரிம இனம் சர்ச் ரோடு (சர்வே எண் 800)இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் 10.10.2026 முதல் 09.10.2029 வரை மூன்றாண்டுகளுக்கு 03.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை விடுவதற்கு தினதந்தி செய்தித்தாள் மூலம் 19.06.2026 விளம்பரம் செய்யப்பட்டது. அன்றையதினம் நிர்வாக காரணங்களால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டு 16.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

பட்டியல் எண் 1 இனம் எண் 2 க்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை .

பட்டியல் எண்–1

வ. எண்.	இனம் எண்	ஒப்பந்தப்புள்ளி விவரம்	குறிப்பு
2	சர்ச் ரோடு (சர்வே எண் 800) இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் 10.10.2026 முதல் 09.10.2029 வரை	1. கேசாந்தகுமார் . 3/50, மெயின் ரோடு திருவைகாவூர், பாபநாசம். ரூ.46,75,995/– 2. B. துர்காதேவி, 18, கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் ரூ.47,52,000/– 3. பேபி சந்திரா, கஅமிர்தசெல்வன்.பெ/, 3/495, யானையடித் தெரு, வலையப்பேட்டை ரூ.46,00,000/– 4. எஸ். கலைச்செல்வி, க.பெ/ சீனிவாசன், 74/91, பழைய அரண்மனைத் தெரு, கும்பகோணம். ரூ.47,10,000/– 5.எஸ்ராஜ்மோகன்., த சந்தான .பெ/ கிருஷ்ணன், 954/1, வேதா நகர், தனலெட்சுமி நகர் விரிவாக்கம், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம். ரூ.45,99,999/–	2023–2024 – ரூ.3366000 2024–2025 – ரூ.3534300 2025–2026 – ரூ. 3711015 சராசரி – ரூ. 3537105 வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.துர்காதேவி என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூபாய்.37,11,015/–விட ரூபாய் 10,40,985/– கூடுதலாக உள்ளது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பரிசீலனைசெய்து முடிவுசெய்யலாம்.

ந.க.எண். 9172/2023/அ7

575

மறு ஏலம் கோரலாம் என மாமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

பொருள் எண்.8

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான உரிம இனம் தஞ்சாவூர் சாலை தாராசுரம் பாலம் அருகில் உள்ள கட்டண கழிவறை மூன்றாண்டுகளுக்கு (01.08.2026 முதல் 31.07.2029 வரை) 03.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை விடுவதற்கு தினதந்தி செய்தித்தாள் மூலம் 19.06.2026 விளம்பரம் செய்யப்பட்டது. அன்றையதினம் நிர்வாக காரணங்களால் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டு 16.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

பட்டியல் எண் 1 இனம் 1 க்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை .

பட்டியல் எண்–1

வ.எண் .	இனம் எண்	ஒப்பந்தப்புள்ளி விவரம்	குறிப்பு
1	தஞ்சாவூர் சாலை தாராசுரம் பாலம் அருகில் உள்ள கட்டண கழிவறை மூன்றாண்டு காலம் (01.08.2026 முதல் 31.07.2029 வரை)	திருமதி.ஜி.மஞ்சுளா க/பெ.கணேசன் சென்னை சாலை கொரநாட்டு கருப்பூர். ரூ.2,32,000/–	2023–2024 – ரூ.199800 2024–2025 – ரூ.209790 2025–2026 – ரூ.220280 சராசரி – ரூ.209957 ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றது. திருமதி.ஜி.மஞ்சுளா அவர்கள் ரூ.232000 கோரியுள்ளார் இது சென்ற ஆண்டைவிட ரூ.11,720/–கூடுதலாக உள்ளது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பரிசீலனைசெய்து முடிவுசெய்யலாம்.

ந.க.எண்.9172/2023/அ7

576

வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு நிர்வாக நலன் கருதி அனுமதி அளிக்கப்பட்டது

பொருள் எண்.9

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான உரிம இனம் நேரு மொத்த காய்கறி அங்காடி, அண்ணா சில்லரை காய்கறி அங்காடியில் நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஓராண்டு காலம் (19.10.2026 முதல் 18.10.2027 வரை) 03.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை விடுவதற்கு தினதந்தி செய்தித்தாள் மூலம் 19.06.2026 விளம்பரம் செய்யப்பட்டது. அன்றைய தினம் நிர்வாக காரணங்களால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டு 16.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

பட்டியல் எண்,2 இனம் எண்.1 க்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை .

பட்டியல் எண்–2

வ. எ ண்	இனம் எண்	ஒப்பந்தப்புள்ளி விவரம்	குறிப்பு
1	நேரு மொத்த காய்கறி அங்காடி, அண்ணா சில்லரை காய்கறி அங்காடியில் நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்களுக்கு தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஓராண்டு காலம் (19.10.2026 முதல் 18.10.2027 வரை)	1. கே சாந்தகுமார் . 3/50,மெயின் ரோடு, திருவைகாவூர், பாபநாசம். ரூ.20,00,000/– 2. B.துர்காதேவி, 18,கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் ரூ.28,53,000/– 3. ஆர்.சக்திவேல் த/பெ. இராஜேந்திரன் 3/733, பிள்ளையார் கோயில் தெரு, செண்பதனிருப்பு , நாகப்பட்டினம் ரூ.29,00,000/– 4. வி.இராஜேஷ்வரன் 19, காளிய பிள்ளை தெரு, கும்பகோணம். ரூ.28,01,000/– 5.பி. விஜயலெட்சுமி க/பெ.பிரபு, 3/495, யானையடித் தெரு மாங்குடி, வளையப்பேட்டை, ரூ.26,00,000/–	2023–2024 – ரூ.1800000 2024–2025 – ரூ.1890000 2025–2026 – ரூ.1984500 சராசரி –ரூ.1891500 வரப்பெற்ற ஐந்து ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.ஆர் சக்திவேல் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூபாய் 18,91,500/– விட ரூபாய் 9,15,500/– கூடுதலாக உள்ளது.

அரசாணை நிலை எண். 384. நாள். 25.08.1998, தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் அறநிலையத்துறை மூலம் தஞ்சாவூர் ராஜா சத்திரத்திற்கு சொந்தமானதும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தில் உள்ளதுமான புஞ்சை நில புல எண்.2/4 ல் 3.59 ஏக்கர் அல்லது 1,56,390.40 சதுர அடி நிலத்தை 30 வருட கால குத்தகைக்கு கும்பகோணம் நகராட்சிக்கு சந்தை அமைப்பதற்கு குத்தகை விடவும் சந்தை மூலமாக ஆண்டொன்றுக்கு நகராட்சி பெறும் மொத்த வருமானத்தில் மூன்றின் ஒரு பங்கை குத்தகைத் தொகையாக மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு கும்பகோணம் நகராட்சி செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

577

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரை பெற்று மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.

மேற்கண்டவாறு, அரசாணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் 30 வருடம் காலமானது 24/08/2028 உடன் முடிவடைவதால், ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டும் குத்தகை கோரப்பட்டுள்ளதால் மீதமுள்ள காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குத்தகைதாரருக்கு குத்தகை விதிகளின் படி நீட்டிப்பு செய்து வழங்குவது குறித்து முடிவு செய்திடலாம்.

காவல் துறை துணை கண்காணிப்பாளர், கும்பகோணம் அவர்களது கடிதம் C.NO.33 /SDO/KKM/Grnl./2026, நாள்:17.07.2026– ல் அதிக ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரியுள்ள திரு.ஆர்.சக்திவேல் என்பவர் பிரபல சரித்திர பதிவேடு குற்றவாளி என தெரிவித்துள்ளார். மேலும் கும்பகோணம் மாநகராட்சி அலுவலகத்தில் தாராசுரம் மார்கெட்டில் இரு சக்கர வாகனம் உள்ளே வந்து செல்ல அனுமதி கட்டணம் வசூல் செய்வதற்கான பொது ஏலம்/ஒப்பந்தபுள்ளி 16.07.2026–ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டார். அவர் ஏலம் எடுக்கும் மற்றவர்களை ஏலம் எடுக்கவிடாமல் மிரட்டி அதிக தொகைக்கு ஏலம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு ஏலம் / ஒப்பந்தபுள்ளியில் பொது மக்கள் பாதுகாப்பு கருதியும், நல்ல நிர்வாகம் அமைந்திட தகுதி நீக்கம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதனை மாமன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மாமன்றம் பரிசீலனைசெய்து முடிவுசெய்யலாம்.

ந.க.எண்.9172/2023/அ7

பொருள் எண்.10

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான உரிம இனம் நேரு மொத்த காய்கறி அங்காடி, அண்ணா சில்லரை காய்கறி வளாகத்தில் பகலில் நிறுத்தப்படும் சுமை/பளு நீங்கலாக உள்ள வாகனம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஓராண்டு காலம் (19.10.2026 முதல் 18.10.2027 வரை) 03.07.2026 அன்று ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை விடுவதற்கு தினதந்தி செய்தித்தாள் மூலம் 19.06.2026 விளம்பரம் செய்யப்பட்டது. அன்றையதினம் நிர்வாக காரணங்களால் ஏலம்/ஒப்பந்தப்புள்ளி ஒத்திவைக்கப்பட்டு 16.07.2026 அன்று ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது.

பட்டியல் எண் 2 இனம் எண் 2 க்கு ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை.

பட்டியல் எண்2

வ. எண்.	இனம் எண்	ஒப்பந்தப்புள்ளி விவரம்	குறிப்பு
2	நேரு மொத்த காய்கறி அங்காடி, அண்ணா சில்லரை காய்கறி வளாகத்தில் பகலில் நிறுத்தப்படும் சுமை/பளு நீங்கலாக உள்ள வாகனம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் 19.10.2026 முதல் 18.10.2027 வரை	1. கே சாந்தகுமார் .3/50, மெயின் ரோடு திருவைகாவூர்,பாபநாசம். ரூ.70,02,000/– 2. B.துர்காதேவி, 18,கோதண்டபாணித் தெரு, கும்பகோணம் ரூ.65,62,050/– 3. கே.முருகன், த.பெ/கிட்டப்பா, 441 பிள்ளையார் கோயில் தெரு, கொரநாட்டுக்கருப்பூர் மனஞ்சேரி ரூ.73,90,000/–	2023–2024 – ரூ.6300000 2024–2025 – ரூ.6615000 2025–2026 – ரூ.6945750 சராசரி – ரூ.6620250 வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.கே.முருகன் என்பவர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியானது சென்ற ஆண்டு குத்தகை தொகை ரூபாய்.69,45,750/– விட ரூபாய்.4,44,250/– கூடுதலாக உள்ளது. .

அரசாணை நிலை எண்.384. நாள்.25.08.1998, தமிழ்வளர்ச்சி பண்பாடு மற்றும் மூலம் தஞ்சாவூர் ராஜா சத்திரத்திற்கு சொந்தமானதும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தில் உள்ளதுமான புஞ்சை நில புல எண்.2/4 ல் 3.59 ஏக்கர் அல்லது 1,56,390.40 சதுர அடி அறநிலையத்துறை நிலத்தை 30 வருட கால குத்தகைக்கு கும்பகோணம் நகராட்சிக்கு சந்தை அமைப்பதற்கு குத்தகை விடவும் சந்தை மூலமாக ஆண்டொன்றுக்கு நகராட்சி பெறும் மொத்த வருமானத்தில் மூன்றின் ஒரு பங்கை குத்தகைத் தொகையாக மேற்குறிப்பிட்ட நிலத்திற்கு கும்பகோணம் நகராட்சி செலுத்த வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு, அரசாணை பிறப்பிக்கப்பட்ட காலத்தில் 30 வருடம் காலமானது 24/08/2028 உடன் முடிவடைவதால், ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டும் குத்தகை கோரப்பட்டுள்ளதால் மீதமுள்ள காலத்திற்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள குத்தகைதாரருக்கு குத்தகை விதிகளின் படி நீட்டிப்பு செய்து வழங்குவது குறித்து முடிவு செய்திடலாம்.

காவல் துறை துணை கண்காணிப்பாளர், கும்பகோணம் அவர்களது கடிதம் C.NO.33 /SDO/KKM/Grnl./2026, நாள்:17.07.2026– ல் அதிக ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரியுள்ள திரு.கே.முருகன் என்பவர் பிரபல சரித்திர பதிவேடு குற்றவாளி என தெரிவித்துள்ளார். மேலும் கும்பகோணம் மாநகராட்சி அலுவலகத்தில் தாராசுரம் மார்கெட்டில் நான்கு சக்கர வாகனம் உள்ளே வந்து செல்ல அனுமதி கட்டணம் வசூல் செய்வதற்கான பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி 16.07.2026–ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டார். அவர் ஏலம் எடுக்கும் மற்றவர்களை ஏலம் எடுக்கவிடாமல் மிரட்டி அதிக தொகைக்கு ஏலம் எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு ஏலம் / ஒப்பந்தபுள்ளியில் பொது மக்கள் பாதுகாப்பு கருதியும், நல்ல நிர்வாகம் அமைந்திட தகுதி நீக்கம் செய்திட உரிய நடவடிக்கை

578

நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரை பெற்று மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.

	மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதனை மாமன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது **அலுவலக குறிப்பு :- மாமன்றம் பரிசீலனைசெய்து முடிவுசெய்யலாம்** **ந.க.எண்.9172/2023/அ7**	
	பொருள் எண்.11 கும்பகோணம் மாநகராட்சியில் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் உள்ள பல்வேறு குத்தகை இனத்தின் கீழ் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அதிக தொகை குறிப்பிட்டுள்ள குத்தகை தாரர்களுக்கு மாமன்ற ஒப்புதலோடு ஒப்படைக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட தொகை வசூல் செய்து மாநகராட்சி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. அவ்வாறு குத்தகையினை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொழுது தற்பொழுது நடைபெற்ற ஏலத்தின் போது குற்றப்பின்னணி கொண்டவர்கள் மற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தாரர்களை மிரட்டி அதிக தொகைக்கு ஏலம் எடுத்துள்ளதாகவும், பொது மக்கள் நலன் கருதி நல்ல நிர்வாகம் அமைந்திட தகுதி நீக்கம் செய்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறை துணை கண்காணிப்பாளர், கும்பகோணம் அவர்களது கடிதம் C.NO.33/SDO/KKM/Grnl./2026, நாள்:17.07.2026 மூலம் தெரிவித்துள்ளார். எனவே ஏற்கனவே உள்ள குத்தகை நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் கீழ்க்கண்டவாறு உள்ள சிறப்பு கட்டுபாட்டினையும் இனி வரும் காலங்களில் கோரப்படும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள இயலும் என்று தெரிவிக்கலாம். பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர விரும்பவர்கள் அவரவர்கள் இருப்பிடத்திற்குரிய காவல் சரகத்திற்கு உட்பட்ட காவல் நிலையத்தில் கிரிமினல் குற்றப்பின்னணி ஏதும் இல்லை என தடையின்மைச் சான்று ஏலத்திற்கு ஒரு வார காலத்திற்கு முன்னர் பெற்று ஆணையர், கும்பகோணம் மாநகராட்சி அவர்களிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் மட்டுமே ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதனை மாமன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு :- மாமன்றம் பரிசீலனைசெய்து முடிவுசெய்யலாம்**	579 நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் தெளிவுரை பெற்று மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது.
	பொருள் எண்.12 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 04-இல் உள்ள 12 வார்டுகளில் டெங்கு கொசு கட்டுப்படுத்தும் (DBC) பணியாளர்கள் 39 எண்ணிக்கை 5 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் பணியமர்த்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.43.30 இலட்சம் (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2) மாநகரத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை 2026-2027 மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம். **ந.க.எண்.005596 /2026/E2**	580 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.
	பொருள் எண்.13 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 01-இல் உள்ள 12 வார்டுகளில் டெங்கு கொசு கட்டுப்படுத்தும் (DBC) பணியாளர்கள் 39 எண்ணிக்கை 5 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் பணியமர்த்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.43.30 இலட்சம் (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரம்மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். **2)** மாநகரத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை 2026-2027 மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம். **ந.க.எண். 005597 /2026/E2**	581 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.
	பொருள் எண்.14 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்-3 தாராசுரம் வார்டு எண்-33-நுண்ணுயிர் உரமிடும் மையம் (MCC) ல் உள்ள உர தொட்டிகளில் தளம் பழுதுபார்த்தல், உர தொட்டியில் சுற்றி அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் பழுது, எலக்ட்ரிக் சுவிட்ச் போர்டு மற்றும் மெயின் போர்டு பழுது பார்த்தல் மற்றும் வெயிட் மெஷின், கன்வேயர் பெல்ட் மாற்றும் பணி போன்ற புனரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.6.80 (ஆறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டபடுகிறது. **அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் . 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதி 2026-2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம். **ந.க.எண்: 5591 /2026 /இ2**	582 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது..

	பொருள் எண்.15 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–03–இல் உள்ள 12 வார்டுகளில் டெங்கு கொசு கட்டுப்படுத்தும் (DBC) பணியாளர்கள் 39 எண்ணிக்கை 5 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் பணியமர்த்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.43.30 இலட்சம் (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். **2)** மாநகரத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை 2026–2027 மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம். **ந.க.எண். 5589 /2026/E2**	583 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.
	பொருள் எண்.16 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் –3 –ல் உள்ள வார்டுஎண்– 36ல் உள்ள பேட்டை தெருவில் கோபுசிவகுருநாதர் மாநகராட்சி தொடக்க பள்ளி அமைந்துள்ளது. அந்த பள்ளியில் உள்ள சுற்று சுவர் 19.06.2026 அன்று பெய்த மழையின் காரணமாக சுற்றுசுவரின் ஒரு பகுதி சேதமடைந்து விட்டது. இப்பகுதி சுற்றுசுவரை புதிதாக கட்டுவதற்காக தயாரிக்கபட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.30 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் . **2.** மேற்கண்ட பணிக்கான செலவினத்தை கல்விநிதி 2026–2027ன் கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம். **ந .க .எண்.5590 /2026 /இ2**	584 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது
	பொருள் எண்.17 கும்பகோணம் மாநகராட்சி – மண்டலம் –1 கரிக்குளத்தில் உள்ள நுண்ணுயிர் உரமிடும் மையம் (MCC)–ல் உள்ள உர தொட்டிகளில் தளம் பழுது பார்த்தல், உர தொட்டியில் சுற்றி அமைக்கப்பட்டுள்ள குழாய்கள் பழுது, எலக்ட்ரிக் சுவிட்ச் போர்டு மற்றும் மெயின் போர்டு பழுது பார்த்தல் மற்றும் வெயிட் மெஷின், கன்வேயர் பெல்ட் மாற்றும் பணி போன்ற புனரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 (ஐந்து இலட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம் . 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை வருவாய் நிதி 2026–2027 கீழ் செலவினம் செய்ய அனுமதிக்கலாம். **ந .க .எண்.5599 /2026 /இ2**	585 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது
	பொருள் எண்.18 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 02–இல் உள்ள 12 வார்டுகளில் டெங்கு கொசு கட்டுப்படுத்தும் (DBC) பணியாளர்கள் 39 எண்ணிக்கை 5 மாத காலத்திற்கு வெளிக்கொணர்வு (Outsourcing) மூலம் பணியமர்த்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.43.30 இலட்சம் (ரூபாய் நாற்பத்து மூன்று இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். **2)** மாநகரத்தின் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட செலவினத்தை 2026–2027 மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கலாம். **ந.க.எண். 5593 /2026/E2**	586 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.
	பொருள் எண்.19 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம்–2 ஸ்டேட் பேங்க் காலனி பூங்கா பசுமை தளம் பராமரிப்பு, சுற்றுச் சுவர் வர்ணம் பூசுதல், செடிகள் நடுதல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமைத்து பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2) இச்செலவீனத்தினை மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் 3) சிட்டி யூனியன் வங்கியின் CSR நிதி கோரப்பட்டுள்ள நிலையில் சிட்டி யூனியன் வங்கி நிதியினை பொது நிதியின் மூலம் ஈடு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு. **ந.க.எண். 0005583 /2026/E2**	587 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி வழங்கப்பட்டது..

	பொருள் எண்.20 கும்பகோணம் மாநகராட்சி குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையம், வலையப்பேட்டை நீருந்து நிலையம் மற்றும் காவற்கூடம் (தாராசுரம்) ஆகியவற்றில் இருந்து மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் கொண்டு செல்லும் பிரதான குழாய்களில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்பு சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.20.00 இலட்சம் (ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் **ந.க.எண். 005537/2026/E2**	588 **வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.**
	பொருள் எண்.21 கும்பகோணம் மாநகராட்சிக்குட்பட்ட குடிதாங்கி New Collector well, குடிதாங்கி Old well, வலையப்பேட்டை நீருந்து நிலையம், காவற்கூடம் தலைமை நீரேற்று நிலையம், தாராசுரம் நீருந்து நிலையம் ஆகிய இடங்களில் உள்ள மோட்டார்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம் **ந.க.எண். 005538/2026/E2**	589 **வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.**
	பொருள் எண்.22 கும்பகோணம் மாநகராட்சி மண்டலம் 2 க்கு உட்பட்ட வார்டு எண் 23-இல் அமைந்துள்ள புறநகர் பேருந்து நிலையத்தில் உள்ள கழிவறைகளை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1) மாமன்றம் அனுமதி வழங்கலாம். 2) இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின்கீழ் மேற்கொள்ளலாம் **ந.க.எண். 005539 /2026/E2**	590 **வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டது**
	பொருள் எண்.23 கும்பகோணம் வட்டம், கருப்பூர் கிராமம் புல எண்கள். 117/1, 117/2, 118/1, 119/1B, 119/2B2B, 122/1, 122/2, 123/1, 124-ல் அமையும் மாநகராட்சிக்கு சொந்தமான 12.83 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் தற்காலிகமாக திறந்தவெளி நெல் சேமிப்பு மையம் அமைக்க மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் மாவட்ட வருவாய் அலுவலர்/முதுநிலை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் அவர்களின் கடித ந.க.எண்.சி2/008966/2026 நாள்.16.06.2026-இன்படி ஒரு சதுரடிக்கு 5 பைசா வீதம் தரை வாடகைக்கு சுமார் 24,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் திறந்தவெளி சேமிப்பு மையம் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ளது. மேற்படி இடம் ஆவண எண்.2667/2025 நாள்.06.10.2025-ன் படி 10.58 ஏக்கர் நிலமும், ஆவண எண்.3214/2025 நாள்.27.11.2025-ன் படி 2.24 ஏக்கர் நிலமும் ஆக கூடுதல் 12.82 ஏக்கர் நிலத்தினை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்.622/2025TP3 நாள்.19.11.2025-ம் தேதிய கடிதத்தின் படி பேருந்து நிலையம் அமைக்க நிலம் தானம் பெறுவதற்கு அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் கும்பகோணத்தின் அனைத்து மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் பேருந்து நிலையம் அமைக்க என்ற வாசகங்களுடன் தானம் பெறப்பட்டது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் வட்டம் சாக்கோட்டை கருப்பூர் கிராம புல எண்கள். 117/1, 117/2, 118/1, 119/1B, 119/2B2B, 122/1, 122/2, 123/1, 124-ல் உள்ள 12.82 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் தரை வாடகை சதுரடி ஒன்றுக்கு 5 பைசா வீதம் 5,58,439.20 x 0.05 = 27,922/-க்கு (ரூபாய் இருபத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்து இரண்டு மட்டும்) கோரியுள்ளது. மேலும், தமிழ்நாடு நகர்புற	**591** இப்பொருள் தொடர்பாக வழக்கு நிலுவையில் உள்ளதால் இறுதி தீர்ப்பு வந்த பிறகு மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது. பொருள் எண்-23 மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு தரை வாடகைக்கு விடுவதற்கு ஏதுவாக சென்னை மாநகராட்சி நிர்வாக ஆணையரிடம் அனுமதி பெறுவதற்கு இன்று நடைபெறுகின்ற மாமன்ற சாதாரண கூட்டப்பொருளில் வைத்துள்ளீர்கள் மேற்படி இடத்திற்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரை

	உள்ளாட்சி விதிகள் 2023 விதி எண் 316(3)–ன் படி இவ்வலுவலக 23.07.2026ம் தேதிய வருவாய் பிரிவின் குறிப்பில் தெரிவித்துள்ளவாறு புல எண்கள். 117/1, 117/2, 118/1, 119/1B, 119/2B2B, 122/1, 122/2, 123/1, 124 –ல் அமையும் 5,58,439.20 சதுரடி பரப்பளவு இடம் சதுரடி ஒன்றிற்கு 0.25 பைசா வீதம் 5,58,439.20 x 0.25 = ரூ. 1,39,610/– மாத வாடகை என நிர்ணயித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அமர்வு மதுரை கிளை வழக்கு எண்.2228/2025–ல் பிறப்பிக்கப்படும் உத்தரவிற்கிணங்க மேற்படி இடம் இம்மாநகராட்சிக்கு தேவைப்படும் பொழுது உடனே ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையோடு மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் மாவட்ட வருவாய் அலுவலர்/முதுநிலை மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு தரை வாடகைக்கு வழங்க ஏதுவாக நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் வழியாக அரசின் அனுமதி வேண்டி கடிதம் அனுப்புவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : **மாமன்றம் முடிவு செய்யலாம்.** **ந.க.எண்.5536/டி1/2026**	கிளையில் வழக்கு எண்.2228/2025–ல் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே இவ்வழக்கின் இறுதி தீர்ப்பு வரும்வரை எந்தவிதமான பயன்பாடும் செய்யக்கூடாது எனவும், மாநகராட்சியின் வருவாயை கருத்தில் கொண்டு இவ்விடத்திற்கு பதிலாக இம்மாநகராட்சிக்கு சொந்தமான கும்பகோணம் தாலுக்கா, கடிச்சாம்பாடியில் உள்ள இடத்தில் நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு வாடகைக்கு வழங்கவேண்டும் இதனை தங்களது மினிட்ஸ்–ல் பதிவு செய்து அதற்கான நகல் மாமன்ற உறுப்பினர்களுக்கு தரும்படி கேட்டுக்கொள்கிறோம் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது.
	பொருள் எண்.24 கும்பகோணம் மாநகராட்சி வருவாய் நிதியின் கீழ் மண்டலம்–3, வார்டு எண்.27 கும்பேஸ்வரன் தெற்கு வீதியில் அமைந்துள்ள அம்மா உணவகம் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணியினை ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மதிப்புமிக்க ஆணையர் அவர்கள் 25.05.2026 அன்று நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட பணிக்கு 18.06.2026 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **வ.எண்** | **ஒப்பந்ததாரரின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி தொகை** | **குறைவு/அதிகம்** 1 | திருவாளர்கள். இராஜரெத்தினம் பில்டர்ஸ், கும்பகோணம் | 453314.69 | 484705.33 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+) 6.92% அதிகம் 2 | M/s. GVN's Madhura Properties. Chennai | 453314.69 | 589054.85 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (+)29.94 % அதிகம் 3 | M/s. Blue Moon Enterprises, Chennai | 453314.69 | 412992.39 | மதிப்பீட்டின் விலை விகிதத்தைவிட (–)8.89 % குறைவு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (–)8.89% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Blue Moon Enterprises, Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. **அலுவலக குறிப்பு** : 1. மாமன்றம் பதிவு செய்யலாம். 2. மேற்கண்ட பணிக்கான செலவினத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **ந.க. எண் 4371/2026/இ2**	592 **வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளின் அலுவலக குறிப்பை ஏற்று பதிவு செய்யப்பட்டது..**

மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 29.07.2026ம்	ஜூலை மாதம் அவசரக்கூட்ட (Table Subject) தீர்மானம் வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள்	மாமன்ற தீர்மான எண்
	பொருள் எண்.1 தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம், திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், சுவாமிமலை ஆகிய பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் கடிதங்களில் மற்றும் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரக கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அவர்களின் 03.10.2025 – ம் தேதிய கடிதத்தில், தூய்மை இந்தியா திட்டம் 2.0–ன் கீழ் 2024–2025ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணம் மாநகராட்சிக்கு அருகாமையில் உள்ள 4 எண்ணிக்கை பேரூராட்சிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள குத்தாலம் பேரூராட்சியில் 15 கிராம ஊராட்சி பகுதிகளில் சேகரமாகும் கசடு கழிவு நீரை Cluster ULB–அடிப்படையில் கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டு வந்து விடுவதற்கு இம்மாமன்ற தீர்மானம் எண் 448 நாள் 25.05.2026–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க. எண் DMA/1687/2026–SBM–1, நாள் 22.05.2026 கடிதத்தின்படி பேரூராட்சிகளில் இயக்குதல் மற்றும் பராமரிப்புக் கட்டணம் வசூல் செய்ய விலக்கு அளிக்கப்பட்டுள்ளதால், மேற்கண்ட தீர்மானத்தை இரத்து செய்யவும், கும்பகோணம் மாநகராட்சி பகுதியினைச் சுற்றியுள்ள தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனம், திருவிடைமருதூர், திருநாகேஸ்வரம், சுவாமிமலை ஆகிய பேரூராட்சிகள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலம் 15 கிராம ஊராட்சி பகுதிகளில் சேகரமாகும் கழிவு நீரை கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் கொண்டுவந்து விடுவதற்கு நகர்புற உள்ளாட்சி அமைப்பு சட்டம் 2023 விதி 376 Decantation fees–ன்படி 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு டேங்கர் லாரிக்கு ஒரு நடைக்கு ரூ.200/– வீதம் மற்றும் 6000 லிட்டர் கொள்ளளவுக்கு மேல் உள்ள ஒரு டேங்கர் லாரிக்கு ஒரு நடைக்கு ரூ.300/– வீதம் பேரூராட்சி பகுதிகளில் இருந்து வரும் லாரிகளுக்கு பதிவுக் கட்டணமாக ரூ.2000/–மும், மேற்கண்ட அனைத்து தொகைகளையும் வசூல் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு:** 1. மாமன்றம் அனுமதிக்கலாம் 2. மேற்கண்ட செலவினத்தை 2026–2027 வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம். **ந.க.எண் 13038/2026 /இ4**	593 வருகை புரிந்த பெரும்பான்மை மாமன்ற உறுப்பினர்களின் அனுமதியோடு இப்பொருளுக்கு அனுமதி அளிக்கப்பட்டது
	பொருள் எண்.2 கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற வார்டு எண்.26 நகரளவை வார்டு எண்.05 பிளாக் எண்.06 நகரளவு எண்.640 நாகேஸ்வரன் தெற்கு வீதியில் உள்ள இடம் அரசாணை நிலை எண்.149 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி3) துறை நாள்.17.08.1998–ன் படி தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட 2422.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டப்படும் இடம் அதிக போக்குவரத்து நெரிசல் மற்றும் வியாபார பகுதியாக உள்ளதால் மேற்கண்ட நகரளவை எண்ணில் கட்டுவதற்கு பதிலாக மாற்று இடமாக கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற வார்டு எண்.38–ல் ஏ.ஆர்.ஆர் நகரில் பொது உபயோக்கியத்திற்காக ஒப்படைக்கப்பட்ட நகரளவை வார்டு எண்.04 பிளாக் எண்.16 நகரளவை எண்.953/2–ல் 2900.5 ச.மீ. பரப்பளவு கொண்ட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் நில பரிமாற்றம் செய்து அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு மாமன்ற தீர்மான எண்.107, நாள்.30.06.2025–ல் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்மானம் தொடர்பாக மாநகராட்சியால் எவ்வித மேல் நடவடிக்கையும் தொடரப்படாததால் கும்பகோணம் மாநகராட்சி நகரளவை வார்டு எண்.05 பிளாக் எண்.06 நகரளவு எண்.640, நாகேஸ்வரன் தெற்கு வீதியில் அமைந்துள்ள 2422.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் ஏற்கனவே குடியிருந்தவர்களுக்கு மேற்படி ஸ்தலத்தில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு மாநகராட்சிக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என தீர்மானம் நிறைவேற்றி தரக் கோரி ஓ.எப்.எம் அடுக்குமாடி குடியிருப்போர் நலச்சங்கத்தினரால் 28.07.2026–ல் கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையிலும் கும்பகோணம் மாநகராட்சி நகரளவை வார்டு எண்.05 பிளாக் எண்.06 நகரளவு எண்.640, நாகேஸ்வரன் தெற்கு வீதியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான 2422.00 சதுர மீட்டர் பரப்பளவு இடத்தில் ஏற்கனவே குடியிருந்தவர்களுக்கு தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டுவதற்கு கும்பகோணம் மாநகராட்சி பெருவாரியான மாமன்ற உறுப்பினர்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என துணை மேயர் சு.ப.தமிழழகன் (மாமன்ற உறுப்பினர் வார்டு எண்.26) பொது சுகாதாரக்குழு தலைவர் இரா.தெட்சிணாமூர்த்தி (மாமன்ற உறுப்பினர் வார்டு எண்.25) அவர்களாலும் 23.06.2026 தேதிய மாமனற கூட்டத்தில் இப்பொருள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும் மேசை பொருளாக 29.07.2026–ல் நடைபெறும் சாதாரண மாமன்றக் கூட்டத்தில் மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது. **அலுவலக குறிப்பு : மாமன்றம் அனுமதி வழங்கலாம்.** **ந.க.எண்.9736/2010/டி1**	594 அனுமதி வழங்கப்பட்டது.

மேயர்
கும்பகோணம் மாமன்றம்